


# தேவதாயின் குரல்

"இறுதியில் எனது மாசற்ற இருதயம் வெற்றி கொள்ளும்"

FOR PRIVATE CIRCULATION ONLY

குரல்: 11 | யாழ்ப்பாணம் | ஒக்ரோபர் 1997


ஆசிரியருரை:—

## சமாதானம் எப்போது வரும்?

ஒக்ரோபர் மாதம், பிரான்சிஸ் அசிசியின் சமாதான மாதம்; அறவழி வாழ்ந்த காந்திஜீயின் மாதம்; உலக அமைதிக்கென தேவதாய், ஆன்ம இரகசியத்திறவுகோலைக் கொடுத்தமாதம்; செபமாலையின் மாதம்.

1917 ஒக்ரோபர் 13, பத்திமாவின் இறுதிக் காட்சிகளில் சூரியன் மிக்க பிரபையுடன் சுழன்று, விந்தைகள் காட்டியதை எழுபத்தையாயிரம் மக்கள் கண்கூடாகக் கண்டு மகிழ்ந்த நாள். அதே சூரியன் திடீரென வானத்தினின்று பூமியை நோக்கி வேகமாக வருவது கண்டு அத்தனைபேரும் மழைவெள்ளம், சேறு சகதியிலும் முழந்தாளிட்டு பாவ மன்னிப்புக்கோரி ஓலமிட்ட நாள், தேவதாயின் இறுதிச் செய்திகளை மூன்று சிறுவர் மூலம், முழு உலகும் அறிந்து கொண்ட நாள்.

பூமி உட்பட சூரியனும் அதன் கோள்களும் அடங்கிய சூரிய குடும்பமாகிய இப்பிரபஞ்சம், இறைவனின் கைகளிலேயே இருக்கிறது. அவையனைத்தும் அவர் சித்தப்பிரகாரமே இயங்குகின்றன.

"வானங்கள் இறைவனின் மாட்சிமையை வெளிப்படுத்துகின்றன. வான்வெளி அவர் தம் கைகளின் வேலைப்பாட்டை விவரிக்கின்றது.

(தி. பா. 19:1)

'அண்டத்திலுள்ளதே பிண்டத்திலும்' என்பது சித்தர்வாக்கு. அண்டத்திலுள்ளது நம் உடலைப் பாதிக்கிறது. பிற கோள்களாகிய செவ்வாய், புதன், வியாழன், சனி எல்லாம் பூமியின் சடப்பொருள் தன்மையையே கொண்டுள்ளன. அவை ஒன்றுக்கொன்று தொடர்புள்ளன. அது பூமியின் சடப்பொருள் உயிர் உணர்வாகி, மானிட பிண்டமாகி அதன் அறிவாற்றலில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது என்பது பண்டைய சித்த மரபு. ஆயின் இப்பிண்டமே அவற்றை பாதிப்புக்கு உட்படுத்தி அவற்றின் வருங்காலத்தை அழிக்கலாம் அல்லது நிர்மூலமாக்கலாம் என்பது விவிலியமும் பத்திமா அறிவுரைகளும் கூறும் உண்மை.

''இப்போதுள்ள விண்ணுலகும் மண்ணுலகும் அதே வார்த்தைகளாலே தீக்கிரையாவதற்கென ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. இறைபற்றில்லாதோர் அழிவுற வேண்டிய தீர்ப்பு நாள் வரையிலும் அவை விட்டுவைக்கப்பட்டுள்ளன.''

(2 பேதுரு. 3:7)

மனிதனின் பேராசை, அவனது சமூகத்தையும் பூமியின் சூழலையும் (நிலம், நீர், காற்று, வானம், நெருப்பு) உறவுகளையும், அவற்றின் சமநிலையையும் அழித்து பேரழிவைக் கொண்டுவரலாம் என்பது பத்திமாவின் இறுதிச் செய்தி.

இதில் ஆண்டவருடைய திட்டம், அதில் எமக்குள்ள இடம், அதன் அழிவில் எமக்குள்ள இடம், பொறுப்பு அனைத்தும் உணர்த்தப்பட்டுள்ளது. பிரபஞ்ச வரலாற்றுக்கு முக்கிய கேந்திரம் எமது உடம்பு.

மனிதனின் தலையாய ஆறு பாவ முனைகள், பத்துக் கற்பனைகளில் எளிமையாகக் கூறப்படுகின்றன. இவற்றைப் புறக்கணிக்கும் மனிதனின் நிலைக்கு ஓர் பெருஞ்சவாலாக அனைத்துலகிலும் அடிக்கடி நாம் காணும் அனர்த்தங்கள், பேரழிவுகள், பயங்கர நிகழ்வுகள் அமைந்துள்ளன.

எம் நாட்டிலும் நீண்டகாலப் போருக்கும், அமைதியின்மைக்கும் காரணம் இங்கு சிந்தப்பட்ட நிரபராதிகளின் இரத்தமல்லவா? அரசியற் படுகொலைகள், பழிவாங்கற் படுகொலைகள், கிராமவாசிகளிடையே படுகொலைகள், சித்திரவதைகள், பலாத்கார நிகழ்வுகள், பேதைப்பெண்களின் அபயக்குரல்கள் பரலோகமட்டும் ஒலமிட்டிருக்குமே?

'உன் சகோதரன் ஆபேல் எங்கே?...... நீ என்ன செய்துவிட்டாய்? உன் சகோதரனின் இரத்தத்தின் குரல் மண்ணிலிருந்து என்னை நோக்கிக் கதறிக் கொண்டிருக்கிறது. (தொ. நூ. 4:9-10)

வரலாற்று நீதிமன்னர் யேசு மேகங்களினூடாக வரும்போது உச்சரிக்கும் இறுதித் தீர்ப்பு வார்த்தைகளை நினைவில் கொண்டு வருவோம்.

'' மிகச் சிறியோராகிய இவர்களுள் ஒருவருக்கு நீங்கள் எதைச் செய்யவில்லையோ அதை எனக்கும் செய்யவில்லை '' (மத். 25:45)

இச் சின்னஞ் சிறியவர்கள் யார்?

குழந்தைகள், அப்பாவிப் பெண்கள் ஆண்கள், ஆதரவற்றோர், அங்கவீனர், நிராயுதபாணிகள், சரணடைந்தோர், போர்க்கைதிகள், மனித பாதுகாப்பற்றோர் அனைவரும் இறைவனின் பாதுகாப்புக்குரிய சிறியோரே. இவர்கட்கு எதிராக வல்லரசுகள் உட்பட, நம் தீவின் எல்லாத் தரப்பினருமே துரோகம் புரிந்துள்ளனர்.

இதற்குப் பிராயச்சித்தம் செய்ய வேண்டியது நம் தலையாய கடமை. இது இன்றி, சமாதானம் பற்றிப் பேச எமக்கு உத்தரவாதம் கொடுத்தது யார்?

மற்றவர் அழ, நாம் அகமகிழ்வது சரியா? இது பற்றி தமிழ்நாடு, முப்பணி நிலையத்தினால் (விவிலிய, மறைக்கல்வி, வழிபாடு) வெளியிடப்படும் பிரபல மாத இதழ் ''தோழன்'' (யூலை 1997, பக்கம் 9) கூறுவது:

'' உள்நாட்டிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் ஊற்றெடுக்கும் பணத்தை எப்படிக் கைப்பற்றுவது, தலைமைப் பதவி, வேலைவாய்ப்பு, இறை அழைத்தல் போன்றவற்றை தத்தம் தாய்

(2 ம் பக்கம் பார்க்க)

# தேவதாயின் அற்புத வரலாறு (தொடர்ச்சி)

ஆறாம் நாளில் அவள் ஒன்பது மணி நேரம் செபத் தியானத்திலிருக்கும்போது அந்த நாளில் சிருஷ்டிக்கப்பட்ட யாவற்றையும் பார்த்தாள். மிருகங்களையும் அவைகளுடைய வகை குணாகுணங்களையும் கண்டறிந்தாள். முதல் மனிதன் என்னத்தினாலே செய்யப்பட்டான் என்றும் பார்த்தாள். ஆத்துமம் சரீரத்தோடு எப்படி இசைந்ததென்றும் கண்டாள். ஆதாமென்பவர் குற்றம் செய்ய முன்னே கொண்டிருந்த நீதியின் தன்மையையும் அவர் எப்படி தந்திரப்பட்டாரென்றும் அவர் தந்திரத்திற்கு இணங்கிய பின் அவரால் உலகத்திற்கு வந்த பொல்லாப்பையும் கண்டு பிடித்து அதனால் சொல்லி முடியாத கஸ்திப்பட்டாள். ஏழாம் நாளிலே சம்மனசுக்களாலே தூக்கப்பட்டு மோட்சத்துக்குப் போனாள். அவ்விடத்திலே இரண்டு ஞானாதிக்கர்கள் உருபம் எடுக்கும் படியாய் சுவாமியானவர் கட்டளையிட்டார். பின் அவளுக்கோர் அங்கி தரிக்கப்பட்டது அதன் ஒளி சூரியனை விட அதிக பிரகாசமுள்ளதாயிருந்தது. பின்பு ஞானாதிக்கர்கள் ஓர் கச்சையைக் கட்டினார்கள். அங்கி பரிசுத்தத்தின் அடையாளமாயிருப்பது போல கச்சை தெய்வ பயத்தின் அடையாளமாம்.

பொன் இழையாற் செய்த கூந்தலை சிரசின்பேரில் வைத்தார்கள். அவள் நினைப்பெல்லாம் தெய்வ அன்பினால் மாத்திரம் உண்டாமென்று இது காட்டும். பின் பாதத்தில் மகாசவுந்தரியமான பாதரட்சையைப் பூட்டினார்கள். இது அவளுடைய காரியங்களெல்லாம் சுவாமியினுடைய மகிமையை மாத்திரம் நாடுமென்ற அர்த்தம் தரும். அவள் கரங்களில் உயர்ந்த காப்பைத் தொடுத்தார்கள். இது அவளுடைய ஆத்தும பெருந்தன்மையைக் காட்டும். அவள் விரலில் உயர்ந்த மோதிரத்தைப் போட்டார்கள். இது அவள் கொண்ட இஸ்பிரீத்துசாந்துவின் வரங்களைக் குறிக்கின்றது. தேவ சம்பந்தமான மூன்று புண்ணியங்களைக் குறிக்கிற மூன்று இரத்தினங்கள் உடைய ஓர் தாவடத்தைப் பெற்றுக்கொண்டாள். அதி தூதரிடத்திலிருந்து அவள் கேட்கப்போகிற விசேஷத்துக்கு அவள் செவிப்புலன் ஆயத்தப்பட மகா அலங்காரமான சிமிக்கிகளும் போடப்பட்டன. அவளுடைய அங்கியின் ஓரத்திலே எழுத்துகள் தொங்கிக் கொண்டிருந்தன. அவ்வெழுத்துக்களைக் கூட்டி வாசித்தால் ''தெய்வத்தின் தாயாகிய மரியம்மாள்'' ''கன்னித் தாயாகிய மரியம்மாள்'' என்னும் பொருள் தரும்.

எட்டாம் நாள் இன்னொரு விசையும் ஆத்துமத்தோடும் சரீரத்தோடும் சம்மனசுக்களுடைய உதவியைக்கொண்டு பரமண்டலத்துக்கு எழுந்தருளிப் போனாள். அப்போது சுவாமியானவர் இவள்தான் உங்களுடைய இராக்கினியென்று சம்மனசுக்களுக்குத் திருவுளம் பற்றினார். அவர்களும் சந்தோஷமாக ஏற்றுக்கொண்டு அக மகிழ்ச்சியோடு நாதம் பொருந்திய சங்கீதங்களைப் பாடினார்கள். அப்போது கடவுளானவர் மரியம்மாளுக்குச் சொன்னதாவது; ''நமது பத்தினியே நம்மால் தெரிந்து கொள்ளப்பட்டவளே, நீ நமக்குப் பிரியமுள்ளவளாய் இருப்பதினாலே நீ விரும்புவதை பயமின்றிக் கேள். நாம் வார்த்தைப் பாட்டில் பிரமாணிக்கமுள்ள தெய்வமுமாய் சர்வசக்தியுடைத்தான இராசாவுமாய் இருக்கிற படியினாலே நம்முடைய இராச்சியத்தில் ஒரு பங்கு நீ கேட்டாலும் நாம் உனக்கு இல்லை எனக் கூறமாட்டோம்'' என்றார். அதற்கு உன்னதமான கன்னிகை பாதாள மட்டும் தாழ்ந்து மறுமொழி சொன்னாள். ''உம்முடைய இராச்சியத்தின் ஒரு பங்கை எனக்காக கேட்கமாட்டேன். ஆனால், அதை முழுமையும் மனுக்குலத்துக்காகக் கேட்கிறேன்'' என்றார். சர்வவல்லபம் பொருந்திய இராசாவே! உமது நித்திய இரக்கத்தினால் உமது ஏக குமாரனாகிய இரட்சகரை எங்களுக்கு அனுப்ப வேண்டிக் கொள்கிறேன்'' என்றாள். கர்த்தர் மறுமொழியாக ''உன்னுடைய விண்ணப்பங்கள் நமக்கு பிரியமாயிருக்கிறபடியினாலே இன்னும் கொஞ்சத்தில் நமது ஏககுதன் உலகத்தின் மேல் இறங்குவாரென்றார். இதைக் கேட்டு ஆனந்த சந்தோசமடைந்தாள். பின்னும் சம்மனசுக்கள் அவளைத் தூக்கிப் பூமியிலே கொண்டு வந்து விட்டார்கள்.

கடைசியாய் ஒன்பதாம் நாள் ஆத்தும சரீரத்தோடு பரலோகத்துக்கு எழுந்தருளப்பட்டு சர்வேஸ்வரனைப் பார்த்தாள். சிருஷ்டிப்புகளையும் பகுதி பகுதியாய்ப் பார்த்தாள். அப்போது சர்வலோகத்தையும் அதிலுண்டான சகல வஸ்துக்களையும் அதன் நாதங்களையும் இசைப்புகளையும் கிரமங்களையும் ஒன்றோடொன்று தட்டுப்படாத வகைகளையும் சர்வேஸ்வரன் அவைகளுக்கு நியமித்த தொழில்களையும் பார்த்தாள். சுவாமியானவர் செய்த சகல வஸ்துக்களுக்கும் இவள் அரசியாக மகா சுந்தரமான ஓர் முடியை அவள் சிரசின் மேற் போட்டார்கள் அதில் சில எழுத்துக்களிருந்தன இவைகளை இவள் கண்டுபிடித்ததில்லை. அவ்வெழுத்துக்கள் ''தேவ தாய்'' என்ற அர்த்தமாம். அப்போது உன்னதமான வரங்களைப் பெற்றுக் கொண்டாள்.

(தொடரும்)

---

சமாதானம்

( 1 ம் பக்க தொடர் )

பிள்ளைகட்குள் பங்கு போட்டுக் கொடுப்பது போன்றவை பகிரங்கமாகவும், காதும் காதும் வைத்தது போலவும் நிகழ்கின்றன. யூபிலி விழாக்கள், முப்பெரும் - ஐம்பெரும் விழாக்கள், சிறிஸ்தவ கோட்டையின் வெற்றி விழாக்களில் கோழிகளுக்கும் கேக்குகளுக்கும் குறைவேயில்லை. ஏழையரைப் பழிக்கும் செயலாகவே இப் படாடோப அணுகுமுறை செயல்படுகிறது. அன்புப் பணிகளின் பகிர்வுக்குப் பதிலாக ஆர்ப்பாட்டத் தேர்த் திருவிழாக்களும், நவநாள்களும், கருத்தரங்குகளும் நடக்கின்றன என்பதே நிதர்சனமான உண்மை.''

தேவதாய் பத்திமாவில் கேட்ட நிந்தைப் பரிகாரம், யேசுவுக்கு எதிராகக் கட்டிக் கொள்ளப்படும் பாவங்கட்கான பரிகாரம் மட்டுமல்ல, யேசுவின் சிறியோர் கட்கெதிரான நிந்தைகளான கொலை, களவு, கற்பழிப்பு, சித்திரவதை, பொய்க் குற்றச்சாட்டு, நிந்தைகள், அநீதிகள் அனைத்தையும் உள் அடக்குகின்றன.

இதற்குப் பிராயச்சித்தம் செய்தே ஆக வேண்டும். இம் மண்ணில் நின்று எழும் நிரபராதிகளின் இரத்தம், இன்றும் இம் மண்ணில் யேசுவின் திருப்பாடுகள் புதுப்பிக்கப்படுவதன் அறிகுறி. இதற்கு நிந்தைப் பரிகாரம் செய்வதன் அவசியத்தை உணர்த்துவது பத்திமா இறுதிச் செய்தியின் மையம்.

இதை கர்மவினை தீர்ப்பாக சிலர் கருதலாம். அது உலக கர்மவினை தீர்க்கும் யேசுவோடு, தாமும் சிலுவையில் அறையுண்டு தீர்ப்பவரின் அலுவலுமாகும். இதையே பத்திமாவில் தேவதாய் ''செபம் - தபம் - நிந்தைப்பரிகாரம்'' என்றார்.

---

விற்பனையாகிறது.

யாழ் திருச்சபை வரலாறு

( கி. பி 50 — 1950 )

விலை ரூபா 50/-

கிடைக்கும் இடம்:

''வளன் ஆச்சிரமம்''

102, பிரதான வீதி,

யாழ்ப்பாணம்.

# இயற்கையை நேசித்த பிரான்சிஸ் அசிசி

ச[illegible]தரன் பிரான்சிஸ் பற்றிய சரி தை[illegible] முதலில் நூல் வடிவம் பெற்ற அதே [illegible]வளை, அசிசியின் ஆலய சுவர்களி[illegible] பிரபல்லிய ஓவியர்களான இயற்றோ முதலியோரின் கைவண்ணத்தால் அவரது உருவங்கள் தோன்றின. இவ்வோவியங்களில், பிரான்சிஸ் இறை[illegible]னுக்கும் மனிதருக்கும் முழு சிருஷ்டிகளுக்குமே கவனமுள்ளவராக, அவர்கள் பக்கம் பூரண அன்புடன் திரும்பி நிற்பவராகவே காணப்படுகிறார்.

பிரான்சிஸ்சன் வாழ்வு ஓர் தெய்வீக ஒன்றிப்பு நிறை தரிசனப் பார்வையை பரந்த வெளியில் கண்டு, இறைவன், மனிதன், இயற்கை, உலகு, சூரியன், [illegible]திரன், நட்சேத்திரம், நெருப்பு, தண்ணீர், காற்று இவையெல்லாவற்றையும் சகோதர சகோதரிகளாக – நம்முடனே சஞ்சரிப்பவைகளாக ஏற்று [illegible]ாழும் ஒரு வாழ்வு.

மற்றைய மனிதர்களின் பார்வைக்கு, மூடுதிரைகள் நிறைந்து தொங்கும் சிருஷ்டிப்பை துண்டாடும் மாயை நீங்கி, பிரபஞ்ச ஒற்றுமையை தெரிவிக்கின்றது. ஆதி மனிதன் ஆதாம், முதல் நாள் ஏதேனின் சிருஷ்டிப்பை நோக்கிய தெய்வீக பிரமிப்போடேயே முழு சிருஷ்டிப்பையும் பிரான்சிஸ் நோக்கினார். இதற்கான படிகளே பிரான்சிசின் சுவாரசியமான வாழ்க்கை.

1182 ல் பிரான்சிஸ் பிறந்த காலத்தில் இத்தாலி, உள்நாட்டுப் போர்களால், சகோதர கொலைகளால் நிறைந்து வழிந்தது. ஓர் நகர் அடுத்த நகரோடு போர்புரிந்த காலம். பெருஜியா அரெசோவுடன், அசிசி பெருஜியாவுடன் ) போர் என்றுமே ஆன்மீக ஒழுக்க சிதைவை ஏற்படுத்தும்.

அக்காலத்தில் அசிசி நகரில் வாலிபர்கள் கூட்டங் கூட்டமாக இரவு நேரங்களில் வீதிகளில் ஆடியும் பாடியும் திரிவார்கள். இதில் இளைஞன் பிரான்சிசும் ஒருவன். இவன் பாடலில் வல்லவன். யாழிசைப்பதில் கைதேர்ந்தவன். கவிதை பொழிவது அவனுக்கு இயற்கை வரம். இதில் அவன் தந்தை பெருமை கொண்டான். பிரான்சிஸ் ஆடிப்பாடி, களிப்புற, தந்தை பியற்றோ பேர்னடீனுக்கு நல்ல புடவை வியாபாரம் நடந்து கொண்டிருந்தது.

1201 ல் பெருஜியா, தன் அயலிலுள்ள அசிசியோடு போர் தொடுத்தது. போரில் பங்களிப்புச் செய்ய போராளிகள் குழுவாக மாறி, யுத்தகளத்தில் குதித்துவிட்டது பிரான்சிசின் தலைமையில் ஒரு கூட்டம், 1202 ல் நவம்பர் மாதத்தில் சன்யோவன்னி என்ற பாலத்தில் நடந்த யுத்தத்தில் பிரான்சிஸ் படுகாயமடைந்து, கைதியாகி, சிறைவாசமும் அனுபவித்தான்.

இந் நிலையில் மனமாற்றத்துக்கு, ஆண்டவனின் அழைப்பொலி கேட்கிறது. 1205 ல் அசிசிக்கு அருகேயுள்ள சான் தமியானோ என்ற இடிந்த சிறுகோவிலில் தனியே நடந்துபோய் அங்கு தொங்கிய மரச்சிலுவையின் முன்பாக முழந்தாளிட்டு செபிக்கத் தொடங்கினார் சிலுவையில் துன்புறும் யேசுநாதன் இவரை அழைத்தார். "பிரான்சிஸ் நீ போய் பாழடைந்து போகும் என் இல்லத்தை பழுது பார்" எனக் கூறினார்.

இவ்வார்த்தைகளைக் கேட்ட பிரான்சிஸ் வீடு திரும்பி, தந்தையின் பிடவைக் கடையிலிருந்த விலையுயர்ந்த துணிக்கட்டுகளை தனது குதிரையின் மேல் ஏற்றி பொலிஞ்ஞோ சந்தையில் அவைகளையும் குதிரையையும் விற்றுவிட்டு பத்துமைல்கள் நடந்து சான்தமியானோவுக்கு வந்து ஆலயத்தைப் பழுது பார்க்கும்படி பணத்தை பங்குக்குரவரிடம் கொடுக்கிறான். ஆன்மீகம் ஒரு சிறுபேதமையில் தான் ஆரம்பிக்கிறது.

பங்குத்தந்தை பணத்தை ஏற்க மறுத்ததும் புதிய வழியில் இறங்குகிறான். முன் ஆடிப்பாடித் திரிந்த தெருக்களில் "ஒரு கல்லு, விண்ணகத்தில் அதற்கு பரிசுண்டு. இரண்டு கற்களுக்கு இரட்டைப் பரிசு" என்று கத்திக்கொண்டு, சான்தமியானோ கோவிலுக்கு கிடைத்த சிறிய பெரிய கற்களைக் காவிச் செல்கிறான், அசிசியிலிருந்து அவ்விடத்துக்கு நடைபோட 20 நிமிடங்களாவது எடுக்கும்.

அவனது பழைய நண்பர்களும் அசிசியின் பெருமக்களும், அரைப் பித்தனென பட்டம் சூட்டி விரட்டியடித்தபோது, வீதியில் நின்றே பரவசமாகி, பிரான்சிஸ் யேசுவை நோக்கிப் பாடத் தொடங்குவான். "எல்லாம் எம் ஆண்டவரைப் புகழட்டும்." ( Laudate Si Omini Signore ) முதலிய பிரான்சிசினால் இயற்றி இசை அமைக்கப்பட்ட பாடல்கள் இன்றுமே பல கூட்டங்களில் பாடப்படுகின்றன.

பிரான்சிசின் முயற்சியினால் கட்டி எழுப்பப்பட்ட சான் தமியானோ, போன்று கட்டி எழுப்பப்படும் திருச்சபை. இவற்றுக்கு பரித்தியாக துன்பங்கள் தேவை. இவைகளே அதை ஆழம் அகலம் கொண்டதாக்கலாம். பரித்தியாகங்களினூடாகவே உண்மையான மறுமலர்ச்சியை திருச்சபைக்குள் குருத்துவமும் துறவறமும் கொண்டு வரலாம்.

அசிசிக்குப் போனால் அங்கு அவர் வாழ்க்கை நிரலின் சின்னங்களை நோக்கலாம், தந்தை பியாற்றோவை விட்டு யேசுவை பின்பற்ற எடுத்த சாக்குச் சட்டை, யேசுவுடன் சுவிசேஷத்தில் வாழ 1208 ம் ஆண்டில் மூன்று தடவைகள் நற்செய்தியை திறக்க வந்த 3 வசனங்கள். முதலியவை அவற்றுள் முக்கியமானவை.

1. "நிறைவுள்ளவராக விரும்பினால் நீர் போய் உம் உடைமைகளை விற்று ஏழைகட்குக் கொடும். பின்பு வந்து என்னைப் பின்பற்றும்" (மத். 19:21)

2. பயணத்துக்கு கைத்தடி, உணவு, பை, பணம் போன்ற எதையும் எடுத்துக் கொண்டு போகவேண்டாம். ஓர் அங்கி போதும். (லூக். 9·3)

3. என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையைத் தூக்கிக்கொண்டு என்னைப் பின்பற்றட்டும். (மத். 16:24)

(i) நற்செய்தி நம்முடன் பேசுகிறது. அதை வாழ முற்படுவோர் வல்லமை நிறை ஆசீர்வாதங்களைப் பெறுவர்.

(ii) அவ் ஏழையின் (பிரான்சிசின்) சாக்கு உடை, பல இடங்களில் பத்துப் போட்டியிருக்கும். அது நமக்கு நற்செய்தி வாழ்வு விடுக்கும் எல்லாவற்றையும் யேசுவுக்காக அர்ப்பணிக்கும் ஏழையின் சரணாகதி நிலை.

(iii) செருப்பு – ஊர் ஊராய் நற்செய்தி சொல்லும் சந்நியாசியின் தடங்கள் – எகிப்திய சுல்தான் அல்மலிக் அல்கமல், பிரான்சிசுக்கு அன்பளிப்புச் செய்த தந்த ஊதுகொம்பு. எல்லா மனிதரையும் அரவணைக்கும் பேரன்பு, சாதி, இன, குலத் தடைகளைக்கடந்து பொங்கிப் பாய்கின்ற புதுவெள்ளம், அணை கடந்து பெருகும் அன்பு வெள்ளம். இவைதான் பிரான்சிசின் ஊக்கிகள்.

1212 ல் புனித கிளாறம்மாளும் சகோதர துறவிகளும் சான் தமியானோவிற்குச் சென்று குடியேறினர். அங்கு அவர்கள் கட்டிக்கொடுத்த ஒரு சிறு குடிசைக்கு, தன் சகோதரர்களால் கைநெகிழப்பட்டவராக பிரான்சிஸ் வந்து சேர்ந்தார்.

தன் வாழ்வின் இறுதி 3 வருடங்களையும் இங்குதான் செலவிடுவார். அவ

( 4 ம் பக்கம் பார்க்க )

இயற்கையை

( 3 ம் பக்க தொடர் )

ரது கண்கள் ஒளி இழந்து குருடாகி வேதனைப்படுத்தின. இடைவிடாது கண்ணீர் வடித்துக்கொண்டிருந்தார்; பெரும் ஏமாற்றங்களை அவர் சந்திக்க வேண்டியிருந்தது. அவரால் உருவாக்கப்பட்ட துறவறத்தார் அவர் வழிகளைப் பின்பற்ற மறுத்தனர்.

அவரது உடலும் உள்ளமும் வேதனை மயமாகின. ஆன்மாவில் உட்பூசல் – இழுபறி – இறைதந்தை கைவிட்டுவிட்டதுபோன்ற உணர்ச்சி, அவரை முன்பு மதித்து, கீழ்ப்படிந்த மிருக பிராணிகள் கூட இப்போது மறுத்தன. எலிகள் இரவும் பகலும் அவர் குடிசையில் தொந்தரவு செய்து குழப்பின. தூங்கவிடாது, உண்ணவிடாது, நிம்மதியாய் இருக்கவிடாது தொல்லை கொடுத்தன.

தன் வேதனையில் அவர் ''ஆண்டவரே எனக்கு உதவிசெய்ய விரைந்து வாரும்,'' எனக் கூவினார் யேசு அவருக்குத் தோன்றி ''சகோதர! உன் நோய்நொடிக்குப் பதிலாக பெரும் ஐஸ்வரியத்தையே கொடுக்கப் போகிறேன் என்றால் அதை மகிழ்ச்சியுடன் ஏற்பாயா? என் அரசையே உனக்குத் தரப் போகிறேன்''. என்றார்.

பிரான்சிஸ், சகோதரன் சூரியனுக்கு, தன் ஒளியிழந்த கண்களில் பிரகாசம் வீசப் பாடத் தொடங்கினார்.

அதி உன்னத சர்வ வல்லமையுடைய
வரே! நல்ல ஆண்டவரே!
புகழ்ச்சியும் மகிமையும், சங்கையும்
சகல வாழ்த்தும் உமதே!
அதியுன்னதரே! உமக்கு மாத்திரமே
இவை எல்லாம் சொந்தம்
உம்முடைய நாமத்தை உச்சரிக்க
எவனும் தகுந்தவன் இல்லையே!
என் ஆண்டவர் சகல சிருஷ்டிகளுட
னும் புகழப்படக் கடவார்.

அவர்களின் முதல்வன் சகோதரன் சூரியன். அவன் பகலவன். அவன் வழியாய் எங்களுக்கு வெளிச்சம் தருகிறீர். அவன் அழகும் பிரகாசமும் சௌந்தரியமும் உடையவன். அவன் உம்மை எங்களுக்கு வெளிப்படுத்தும் ஓர் அடையாளம் சகோதரி நிலவுக்காகவும் நட்சேத்திரங்களுக்காகவும் என் ஆண்டவரே உமக்குப் புகழ்ச்சி.

வானத்திலே துலக்கமும் பிரகாசமும் அழகும் உள்ளவைகளாக அவைகளைப் படைத்தீர்.

சகோதரன் காற்றுக்காக ஆண்டவரே உமக்குப் புகழ்ச்சி. உமது சிருஷ்டிகளுக்கு அவைகள் மூலம் போஷிப்பளிக்கிறீர்......

# புதுயுகம், புதிய ஆலயம்

திருச்சபை என்னும் கட்டிடம் இடிந்து வீழ்வதைக் காட்சியில் கண்ட பிரான்சிஸ் அசிசியும், உலக தேவாலயங்களனைத்துக்கும் முதன்மையாக விளங்கும் லத்தரன் பேராலயம் சரிந்து வீழ்வதையும் அதை ஒரு ஏழைப்பரதேசி தாங்கி நிறுத்துவதையும் கனவிற் கண்ட 3 ம் இன்னோசெந்து பாப்பரசரும் ஒருவரை ஒருவர் அன்று சந்தித்தனர். பிரான்சிசின், ஆன்மீக வழியில் சுவிசேஷ ஏழ்மையில் திருச்சபையைக் கட்டியெழுப்பும் திட்டத்தை பாப்பரசர் ஆர்வத்தோடு அங்கீகரித்து ஆதரித்தார்.

அதன் எதிரொலிகள் 12 ம் 13 ம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவிலும் 14 ம் நூற்றாண்டில் சீனாவிலும் 16 ம் நூற்றாண்டில் இந்தியா இலங்கையிலும் இத்துறவிகள் ஊடாக ஏற்பட்டது. இன்று பாப்பரசரின் திருச்சபை படும் அவவிசுவாச வேதனைகள் பற்றிய தரிசனங்களும், சில தினங்களின் முன் இத்தாலியில் ஏற்பட்ட நிலநடுக்கத்தினால் அசிசியின் கோவில் சேதமடைந்ததும் ( வெரித்தாஸ் வானொலிச் செய்தி ) ஓர் நவீன இறுதிக்கால அடையாளமாகவே கொள்ள வேண்டும்.

கோவில்கள் உடையலாம்; சிதைவுறலாம். அவை கற்களால் ஆனவையே. ஆயின் பேதுறு சொல்லும் திருச்சபை அழிவுற முடியாது.

''நீங்களும் உயிருள்ள கற்களாயிருந்து, ஆவிக்குரிய இல்லமாய்க் கட்டி எழுப்பப்படுவீர்களாக. இயேசுக்கிறிஸ்துவின் வழியாய்க் கடவுளுக்கு உகந்த ஆவிக்குரிய பலிகளைப் படைக்கும் தூய குருக்களின் கூட்டமாகவும் இருப்பீர்களாக. ( 1 பேதுரு. 2:5 )

யாழ் ஆயர் இல்லத்துக்கு இத்தாலியில் இருந்து வந்த (''Today's visionary Phenomena'') என்ற செய்தித்தாளில் இருந்து எடுத்தது.

தேவதாய் யூலியா என்ற இத்தாலிய பெண்மணிக்கு 16-7-97 ல் கொடுத்த காட்சியில் ''உலகம் இன்னும் மோசமான அழிவை நோக்கிச் செல்கிறது. உலகின் தலைவர்கட்கு சமாதானத்தில் விருப்பம் இல்லை. அதனால் என் சிறிய குழந்தைகள் எதிரியின் வலைக்குள் விழுந்து விடுகின்றனர்'' என்றாள்.

17-7-97 காட்சியில் இயேசு தன் உடலில் இருந்து சொட்டும் இரத்தத்தைக் காட்டி, ''மகளே நீ காணும் இரத்தம் இன்று சிந்தப்படும் மாசற்றவர்களின் இரத்தம், அதற்காக தூய்மையான துன்பங்களை ஏற்றுக்கொள்'' என்றுரைத்தார்.

24-7-97 ஆவணி 15 ல் தேவதாய் லொறெற்றோவிற்கு வா என்றாள். லொறெற்றோ காட்சி பற்றிய செய்திகள் இன்னும் வெளிவரவில்லை.

லொறெற்றோவில்தான் தேவதாய் நசரேத்தில் வாழ்ந்த சிறிய செங்கல் வீடு இன்றும் உள்ளது.

இன்று பெரிய கவர்ச்சிகர ஆடம்பரங்கள் நிறைந்தவற்றையே மனிதர் விரும்பித் தேடுகின்றனர். இவை இறைவனின் வழிகள் அல்ல. இறை ஆசீரை இவை கொண்டுவரமாட்டா. இறைவன் மௌனத்தில்தான் உலாவி செயலாற்றுகிறார். இதுவே நசரேத்தில் நடந்தது.

''பிள்ளைகளே! இவ்வுலகத்தில் செல்வம் சேர்க்க வேண்டாம். என் தந்தை நாட்டைத்தேடி, என் பாறையில் கட்டுங்கள். மரியாளின் ஏழை வீட்டில் தஞ்சம் புகுந்து விடுங்கள். அதைப் புறக்கணியாதேயுங்கள்'' என்கிறார் தேவதாய்.

மரியாள் இறை மனித சதை, எடுத்த வைபவத்தில் ஓரம் கட்டப்பட்டவள் அல்ல. அதுபோலவே இந்த இரண்டாம் நசரேத்தும் ( லொறெற்றோவும் ) இருக்கும். புதிய மனிதனின் திருச்சபை, மரியாளின் மாசற்ற இருதயத்தில்தான் இருக்கும். மரியாளோடு சொற்பமே ஈடுபாடுள்ளோர் இறைவனின் திருமலையில் உயர ஏறமாட்டார். மரியாளின் கல்விக்கூடம் ஓர் உயிர்த்துடிப்புள்ள இறையியல் கல்லூரி. அதில் நம் அறவழிப்பாடத்தைக் கற்று வாழ்வோமாக

இறைவா,

வெறுப்பும், கோபமும், பகையும் என் உள்ளத்தை ஆட்டிப்படைக்கின்றன. சில சமயம் தாங்கமுடியாமல் தவிக்கின்றேன். வரண்ட தரையாக, என் இதயம் மாறிவிடுமோ என்று எனக்குப் பயமாக இருக்கிறது. தயவு செய்து உமது அன்பு மழையை என் மீது பொழிந்து என்னைக் காப்பாற்றும். (எனக்கென்ன கவலை, நூலிலிருந்து)

Print : Annai printers, Jaffna.
Published by PAX CHRISTI,
St. JOSEPHS ASHRAM,
102, Main Street, Jaffna.